ஒதுக்கீட்டுத் தலைப்பு 134 – தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு

இந்த அறிக்கை 2 பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## 1 ஆம் பகுதி

**தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| செலவுத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 236 | அரசகரும மொழிகள் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 470,963,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 369,541,624 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க நிதி ஏற்பாடுகளிலிருந்தான தேறிய சேமிப்புக்கள் ரூபா 90,630,976 இற்கும் ரூபா 10,790,400 இற்கும் இடைப்பட்ட வீச்சில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 23 சதவீத்திற்கும் 14 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

## 2 ஆம் பகுதி

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பு தொடர்பான விபரமான அறிக்கை

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 134 – தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 28 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

| | | |
|---|---|---|
| (ஆ) 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009 (01) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 03 மற்றும் 05 ஆம் பந்திகள் | - | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்றை தாபிப்பதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

1.6 **செயலாற்றல்**

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான கருமங்கள்**

(அ) 2012 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மொழிகள் பிரிவினால் 72 பிரதேச செயலகப் பிரிவுகளில் இரு மொழிகள் நிவாரண கரும பீடங்களை தாபித்து பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிவாரண கரும பீடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததாக 48 பிரதேச செயலகப் பிரிவுகளால் மாத்திரம் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இந்தியாவிலிருந்து திரும்பி வந்த அகதிகளை ஒருங்கிணைக்கும் 05 நிகழ்ச்சித்திட்டங்களையும் புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர்களை ஒருங்கிணைக்கும் 05 நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், அந் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) விதவைப் பெண்களை பராமரிப்பதற்காக 02 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், எந்தவொரு நிகழ்ச்சித்திட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கல்வியினை ஆரம்பிப்பதன் மூலம் சமூக ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கான 03 நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிட்டிருந்த போதிலும், அது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) பெருந்தோட்ட சமூகத் தலைவர்கள் மற்றும் ஏனைய அவதியுறும் மக்களுக்காக 05 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 300,000 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 89,011 இனை செலவிட்டு ஒரு நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

வழிவகுத்த காரணங்கள் எவையென ஏற்றுக்கொள்ளப்படத்தக்க எக்காரணமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.8 முகாமைத்துவ பலவீனங்கள்

கொழும்பு 03, காலி வீதியில் அமைச்சு தாபிக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் வாடகை உடன்படிக்கை 2010 சனவரி 31 ஆந் திகதி முடிவடைந்திருந்ததுடன் உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம், உடன்படிக்கை முடிவுற்று மூன்று மாத காலத்தினுள் மீளளிக்கப்பட வேண்டிய வைப்பு அமைச்சிற்கு பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது. இருப்பினும், உடன்படிக்கையின் பிரகாரம் மூன்று மாதத்தினுள் வைப்புப் பணத்தினை அமைச்சிற்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் ரூபா 5,400,000 ஆன வைப்புப் பணம் 2013 திசெம்பர் மாதம் வரை அமைச்சிற்கு கிடைத்திருக்கவில்லை.

### 1.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 13 | 11 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 03 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 354 | 133 | 221 |
| (iv) | ஆரம்ப நிலை | 93 | 89 | 04 |
| | மொத்தம் | 465 | 236 | 229 |

வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1994 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் II ஆம் இலக்கப் பட்டோலையின் பிரகாரம், பெறப்பட வேண்டியுள்ள கடன் முற்பண மீதிகள் தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்காக செலுத்தப்பட முடியுமான அதிகூடிய இடர் கடனின் அளவு ரூபா 250,000 இற்கு வரையறுக்கப்பட வேண்டிய போதிலும், அந்த ஏற்பாடுகளைக் கருத்திற்கொள்ளாது கடன் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டது.

### 2.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

#### 2.4.1 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்காக அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினாலும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களைச் செயற்படுத்துதல்

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சினால் நடாத்தப்படுகின்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் திணைக்களமும் பங்குபற்றியிருந்ததுடன் திணைக்களத்தில் 2012 ஆம் ஆண்டிற்காக எந்தவொரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.5 செயலாற்றல்

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி இரு மொழிகள் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள சகலருக்கும் 2012 ஆம் ஆண்டில் சான்றிதழ்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2007 முதல் 2011 ஆம் ஆண்டு வரை பல்வேறு தேர்ச்சி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க நிறுவனங்களிற்காக உத்தியோகபூர்வ மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்தல் திணைக்களத்தின் பிரதான பொறுப்பாக காணப்பட்ட போதிலும், சிங்களம்/ஆங்கிலம், தமிழ்/ஆங்கிலம் மற்றும் சிங்களம்/தமிழ் போன்ற மொழிபெயர்ப்புகளிற்கு 03 அத்தியட்சகர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலை பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் தோன்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 10 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக மொழி ஆய்வுகூடப் பதவியும் மீளாய்வாண்டின் இறுதியளவில் 10 மொழிபெயர்ப்பாளர் மற்றும் 18 மொழிபெயர்ப்பு உதவியாளர் பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன.